முருகப்பெருமான் துணை

# மகான் போகமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.03.2024**, வெள்ளிக்கிழமை

1. வறுமைதனை உலகினில் விரட்டி
வளமாக்க வந்த வள்ளலே
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அய்யனே உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சேல்திங்கள்
குறைவிலா மூவையோர் திகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 16 ம் நாள், 29.03.2024, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க போகமகரிஷியானும்
3. யானும் உலகநலம் பெற உரைப்பேன்
உலகமாற்றம் நிகழ்த்த வேண்டி
ஞானம் அருளும் அரங்கன்
நன்னெறியை மக்கள் ஏற்று வர
4. வருகவே கலிவாழும் மக்களுக்கு
வதையான கருமவினை அகல
தருமவழி எனும் சக்தி கிடைத்து
தன்னார்வத் தொண்டு பலம் கூடி
5. கூடியே கலியிடர்களை கடந்து
குறிப்பாக பசிபிணி வறுமை விரட்டி
தேடியே மற்றவர்க்கும் தருமம்
தொடர்ந்து வழங்கி சேவை கூட்டி
6. கூட்டியே உலக நடப்பிலே
குருவருள் துணை பெருக
கட்டங்கள் யாவும் வென்றுமே
கலியினில் இல்லறக் கடமை ஆற்றி
7. ஆற்றியே ஞான வழிதனிலும்
ஆன்மா தேற்றம் கண்டிட
உற்றதொரு ஞான சேவை ஆற்றி
உலகினில் மகத்துவம் அடைவர்

8. அடையவே அரங்கனை நாடிடும்
அளவிலா கூட்டம் பெருகி
தடையற தொண்டர் படையெனும்
தனிப்பெருங் கருணை மிகுந்த
9. மிகுந்த ஞானப்படைகள்
மண்ணுலகம் எங்கும் பெருகி
வகைபட மேலவர்கள் வியக்க
வையகம் மாற்றும் சக்திகள் ஆக
10. ஆகவே நிலைகள் உயர்ந்து
அகிலத்தை பாதுகாக்கும்படி
மகான்களாக வெளிப்படவே
மக்களுள் சக்தி கூடி
11. கூடியே ஞானபலம் கொண்ட
குருவருள் கொண்ட வண்ணம்
நாடெங்கிலும் ஞானத்தலைமை பெருகும்
நாட்டிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—